
ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

## கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - 10 2018



“இனி ஒரு விதி செய்வோம்”

பெரியாழ்வார் ஆச்சிரமம்



HARI ENGINEERS & CONTRACTORS

Malaisanthi
Alvai Road
Alvai
Jaffna
+94(021) 2261400

Hot Line
009477 2830694

www.hariengineering.com





வேணி களஞ்சியம்

கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



கஜமுகன்
ஹாட்வெயார்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

இதழ் - 10, 2018

**பிரதம ஆசிரியர்**
வை. நவதரன்

**துணை ஆசிரியர்**
க. அருட்செல்வம்

**ஆலோசகர்**
பண்டிதர் பொன் சுகந்தன்

**உருவம் கொடுத்தோர்**
பா. மணிக்குமார்
ஆ. ஜெயராசா
சி. நிரூபன்
கு. விக்னேஸ்வரன்
கௌ. சித்தார்த்தன்
க. லோகிதா


## தொடர்புகளுக்கு :


**சக்கரம்**
**பெரியாழ்வார் ஆச்சிரமம்**
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**
***Chakkarameditor@gmail.com***
***T.P:0773463358***


## உள்ளே...


குலசேகராழ்வார் அனுபவித்த
அயோத்திராமன்

மணிவாசகப்பெருமானின்
திருவாசகப்பாடலில் வரும்
குழைத்த பத்துப் பதிகத்தின்
தொடக்கப் பாடற் சிறப்பு

கந்தபுராணம்
காட்டும் அறவியல்

திருப்பாணாழ்வார் காட்டும்
கண்ணனின்
அழகுக்கோலங்கள்

இன்றைய உலகில்
இந்து சமய பண்பாட்டு
அம்சங்களை
மறக்கிறார்களா?
மதிக்கிறார்களா?

விஸ்ணுபகவான் கொண்ட
பத்து 10 அவதார மகிமைகள்

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு

## உண்ணா நோன்பு

மனிதகுலம் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு விரதங்கள் மிக இன்றியமையாததாக காணப்படுகின்றன. மனிதர்களை துஷ்ட சக்திக ளினால் ஏற்படும் துன்ப துயரங்களில் இருந்து பாதுகாப்பதற்கு விரதம் நோற்றல் என்னும் தன்மையினை நடைமுறைப்படுத்தினார் கள். எம் முன்னோர்கள் விரதம் என்பது உணவினைச் சுருக்கிஜேனும் விடுத்தேனும் மன ஒருமைப்பாட்டோடு நோற்றல் ஆகும்.

மனிதர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கடவுளர்களோடு நெருங்கிய ஈடுபாடு கொண்டு அதிக பக்தியோடு செயற்படுவார்கள். விநாயகரை வழிபடுவோர்கள் சதுர்த்தி தினத்தன்று மேற்கண்ட செயற்பாட்டில் ஈடுபடுவார்கள் . இதே போன்று பிரதோஷம், கார்த் திகை எனப் பல விரதங்களை மாதம் தோறும் எம் முன்னோர்கள் வடிவமைத்து அதன் வழி வாழ்ந்து காட்டினார்கள்.

இவ்விரதங்கள் யாவிலும் சிறந்ததாகவும் உயர்வானதாகவும் அமைவது விஷ்ணு பெருமானை வேண்டிநோக்கும் ஏகாதசி விரதமாகும். இவ்விரதமானது அன்றைய தினத்தில் உணவேது மில்லாது துளசி கலந்த நீரினைப் பருகி மறு நாட் காலை சூரிய உதயத்திற்கு முன்னர் பாரணை செய்து விரதத்தினை நிறைவு செய்வார்.

இத்தகைய தன்மகளைக் கொண்ட விரதங்களை நோற்பத னால் மனித உடல்களில் மேலதிகமாக இருக்கும் கொழுப்பு உள்ளிட்ட சக்திகள் யாவும் உடல் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் இயங்குவதற்கும் வித்திட்டுச் செல்லும் முறையாக உண்ணா நோன்பு காணப்படுகிறது.

– ஆசிரியர்

# குலசேகராழ்வார் அனுபவித்த அயோத்திராமன்

இம்மை வாழ்வு பற்றிய காதலையும் போரையும் கருவாகக் கொண்ட சங்க இலக்கியப் போக்கை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பரம்பொருளின் எண்ணத்தை ஊட்டுவதாக மாற்றினர். அவர்களது பாடல்கள் உயிர்த்துடிப்பும், உருக்கமும் உணர்ச்சியும் மிகுந்தவை. பக்தியியக்கம் நடைபெற்ற பல்லவர் காலப் பகுதியிலே வைணவ பக்தியியக்கத்துக்கு முன்னின்று உழைத்தவர்கள் ஆழ்வார்களாகும். இவர்கள் திருமாலினுடைய தோற்றப்பொலிவிலும் அவதார மகிமையிலும் மனதைப் பறிகொடுத்து அவனைப் பலவாறாகப் பாடிப் பரவினர்.

திருமால் பத்து அவதாரங்களையுடையவர் என்று கூறப்படுகிறது. திருமாலினுடைய பல அவதாரங்கள் ஆழ்வார் பாடல்களிலே கூறப்பட்ட போதிலும் கிருஷ்ண, இராம அவதாரங்களிலேயே ஆழ்வார்கள் மிகுதியாக ஈடுபட்டு உணர்ச்சிப் பிரசாகமான பாடல்களைப் பாடியுள்ளனர். ஆழ்வார்கள் அவ்விரு அவதாரங்களிலுமே ஆழ்ந்து ஈடுபட்டதற்குக் காரணமென்ன? கிருஷ்ணாவதாரத்திலும் இராமாவதாரத்திலுமே முறையே கண்ணனும், இராமனும் குழந்தைகளாகப் பிறந்து வாலிபவர்களாக வளர்ந்து மக்களோடு பழகி இக வாழ்வு வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இறைவனின் குழந்தைத்தன்மை, வாலிபத்தன்மை களிலே ஈடுபட்ட ஆழ்வார்கள் கண்ணனையும், இராமனையும் மக்கள் உள்ளங்களிலே தம்பாடல்கள் மூலம் உயிருள்ளவனாக உலாவ விட்டார்கள்.

உயிர்த்துடிப்புள்ள வைணவ பக்திப் பாடல்களைப் பாடிய ஆழ்வார் பன்னிருவரிலே குலசேகரர், திருமங்கைமன்னன், பெரியாழ் வார் மூவரும் இராமனைப் பாடியுள்ளனர். அவர்களுள்ளே குலசேகராழ்வாரே இராமா

அவர்களுக்குள்ளே குலசேகராழ்வாரே இராமாவதாரத்திலே மிகுதியாக ஈடுபட்டுள்ளார். மற்ற இருவரும் கிருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபட்டுப் பலவாறாகப் பாடிப் பரவினர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் குலசேகராழ்வார் சேரமன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தும் அந்த அரச செல்வத்தையும் உயர்ந்த மானிடப் பிறப்பையும் பொருட்படுத்தவில்லை. அவற்றைவிடத் திருமாலின் திருவேங்கடம லையில் வாழும் பறவையாய்ப் பிறக்க விரும்புகின்றார். "அரம்பையர் சூழ வானுலகத்தை ஆளும் செல்வமும், மண்ணுலகத்து அரசும் யான் வேண்டேன். திருவேங்கடமலையில் ஒரு சுனையில் மீனாகப் பிறக்கும் விதி எனக்கு வாய்க்குமானால் மகிழ்வேன் என்கிறார்.

மக்களது உணர்ச்சிகளை ஆழமாகத் தொடத்தக்க விதத்திலே தாலாட்டு தசரதன் புலம்பல் போன்ற பாடல்களை அமைத்த காரணத்தாற் குலசேகரர் ஆழ்வார்களிலே சிறந்த புலவராகப் பாராட்டப்படுகிறார். இவராலியற்றப்பட்ட பாடல்கள் 'பெருமாள் திருமொழி' என்னும் தலைப்பில் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் குறைவாக இருந்தபோதிலும் அவை படிப்போரின் உணர்வுகளைக் கிளறிச் செல்கின்றன.

இவரது இராமபக்திப் பாடல்கள் முப்பத்தி மூன்றே இவை மூன்று பதிகங்களாக அமைந்திருக்கின்றன. இந்த மூன்று பதிகங்களிலும் இராமசரிதம் கூறும் பதிகம் இறுதியிலும் தாலாட்டுப் பாடல்கள் முதலிலும் தசரதன் புலம்பல் என்ற பகுதி நடுவிலும் அமைந்திருக்கின்றன. தசாவதாரங்களில் இராமாவதாரம் மிகவும் மேன்மை பெற்றது எனக் கருதப்படுகிறது. அவ்விதம் மேன்மை பெற்ற இராமனது வாலிபப் பருவமே குலசேகரர் மனதைக் கவர்கிறது. குலசேகரரது பாடல்கள் தூய்மை அன்பு, பிரிந்திருக்கும் தந்தையின் ஏக்கம் தவிப்பு போன்ற பல உணர்ச்சி நிலைகளைப்

பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றன. இவர் கண்ணனவதாரத்தைப் பாடியபோதும் அங்கு இராமனுடைய பெருமையையே பாடினார். இவர் தில்லைத் திருச்சித்திரகூடத்திலே திருமாலை வணங்கும் போதும் இராமனைக் காண்பதாகவே பாடியுள்ளார்.

இவ்விதம் இராமனை மிகுதியாக அனுபவித்து இவர் பாடுவதற்குக் காரணமென்ன? அதனை அறிந்து கொள்வதற்கு அவரைப்பற்றி வழக்கிலுள்ள கதைகள் உதவுகின்றன.

அரசனாக இருந்தும் அரசவாழ்க்கையிற் பற்றில்லாத குலசேகரர், வால்மீகி இராமாயணப் பிரசங்கத்தை முறையாகக் கேட்பது மரபு. ஒருநாள் பிரசங்கம் நடந்து கொண்டிருக்கும் பொழுது கரதூஷனாதியர் பெருஞ் சேனையுடன் இராமனை எதிர்க்க அவர் இளைய பெருமாளைப் பிராட்டிக்குக் காவலாய் ஆச்சிரமத்தில் வைத்து விட்டுத்தான் ஒண்டிக் கட்டையாய்ப் போருக்குச் சென்றார் என்ற கட்டம் வந்தது. இராமனுடைய அவதார மகிமையில் ஈடுபட்டுத் தன்னையும் உலகத்தையும் முற்றும் மறந்து நெடு நாளைக்கு முன் நடந்த செயல்கள் அப்பொழுது நடந்ததாய்ப் பாவித்து "ஐயோ எம்பெருமானுக்கு இப்படி ஆபத்து நேரும் பொழுது அவரை ஒண்டியாய் இக்கொடிய அரக்கர்களின் கையில் காட்டிக்கொடுத்து விட்டேனே. என் இராச்சியமும் சேனையும் எதற்கென்று படைத்தேன்" என்று பதறி உடனே சேனாதிபதிகளைப் போருக்குச் சித்தமாய்ப் படைகளை அணிவகுத்துச் செல்லும்படி கட்டளையிட்டுத் தானும் போர்கோலத் துடன் கடுவேகமாய்ச் சென்றார். எல்லோரும் அதைக்கண்டு திகைத்து நிற்கையில் அதிசாதுர்யமுள்ள பிரசங்கி அவருடைய மனோபாவத்தைக் கண்டறிந்து சமயோசிதமாய் இராமன் தான் ஒண்டியாகவே இராட்சத படைகளை ஒரு நொடியில் யமலோகத்துக்கு அனுப்பி ஆசிரமத்துக்குத் திரும்பி வந்தார் என்ற சுலோகத்தை உடனடியாக எடுத்துச் சொன்னார். அதைக்கேட்ட குலசேகரரும் மகிழ்ச்சி கொண்டு தன் பிரயா ணத்தை நிறுத்தினார்.

பின்பு ஒருநாள் குலசேகரருடைய மனோபாவத்தையறியாத வேறொருவர் பிரசங்கம் செய்யம் பொழுது சீதா பிராட்டியை இராவணன் எடுத்துப் போனதையும் சீதையின் கதறலையும் விரித்துக் கூறிக்கொண்டிருந்தார். அதைக்கெட்ட குலசேகரரின் மனம் கொதித்து உடல் பதைத்து “அடியேன் இருக்கையில் இந்த நீசன் என தாயை இப்படித் துணிந்து எடுக்கவும் அவள் கதறியழவும் நான் பார்த்துக் கொண்டிருப்பதா? இப்பொழுதே இராவணன் இலங்கைக்குச் செல்லுமுன் தடுத்து அவனையழித்து என் மாதாவை மீட்டு வருவேன் என்று கூறிக்கொண்டு படையுடன் இலங்கையை நோக்கிப்புறப்பட்டார். எல்லோரும் பெருங்கவலை கொண்டு இது எப்படி முடியுமோ என்ற அவரைப்பின் தொடர்ந்தார்கள். கடலில் இறங்கி நடந்து கழுத்தளவு தண்ணீரிற் போன பொழுது இவரை வேறு விதமாய்த் தடுக்க முடியா தென்றறிந்த இராமர் சீதா சமேதராய் இளைய பெருமாளுடன் ஆழ்வாருக்கெதிரில் வந்து “ஏனிப்படிப் பதறுகிறீர்? நாம் அரக்கருடன் போர் புரிந்து அவர்களை யழித்துத் தேவியை மீட்டு வந்து விட்டோம். கவலை வேண்டாம். திரும்பிச் செல்லம் என்று ஆறுதல் சொல்லி மறைந்தார். அதன் பிறகு குலசேகரர் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினார்.

இவ்விதமாக வழங்கும் வரலாறுகளை நாம் நம்பாவிட்டாலும், இராமனிடம் குலசேகரக்கிருந்த அன்பையோ அல்லது இராமாவதாரத்தில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பதையோ நம்மால் மறுக்க முடியாது. குலசேகரர் தில்லைச் சித்திர கூடத்தில் அறி துயில் கொள்ளும் திருமாலைப் பாடும் நிலையில் இராமசரிதத்தினையே மக்களைக் கவரும் விதத்தில் அழகாகப் பாடுகிறார். அவ்வாறு பாடும் போதும் வரலாறுகள் ஆங்காங்கே கேட்கப்பெற்றாலும் பக்திச்சுவை மலிந்த தோத்திரமாயுள்ளன. வேயன்றிக்கதை தழுவிய தொடர் நிலைச் செய்யுளாக இல்லை. “இராமயாணக் காவியங்களிலே காணப்பெறதா

பல செய்திகளைக் குலசேகர ஆழ்வார் திருவாக்கில் காணலாம்" என்கிறார். கி.வா.ஜனநாதன் அவர்கள்.

இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடுடைய குலசேகராழ்வார் கைகேயி விரும்பியவாறு இராமன் மரவுரி உடுத்துக் காட்டுக்குச் சென்ற துன்பத்தை நினைந்து நினைந்து உருகிப் புத்திர சோகத்தால் தசரதன் புலம்புவதாகப் பாடியபாடல்கள் உணர்ச்சிக ளைத் தொட்டுச் செல்லக்கூடியவை. அப்பாசுரங்கள் படிப்போர் உள்ளத்தைச் சோகம் பொங்கிப் பொங்கி வரும் ஊற்றுக் கண்ணாக மாற்றி விடுகின்றன.

அம்மாவென்றழைக்கும் ஆர்வச்சொல்
கேளாதே அணிசேர் மார்வம்
என்மார்வத்திடையழுந்தத் தழுவாதே
முழுசாதே மோவாதுச்சி
கைம்மாவின் நடையன்ன மென்னடை
யும் கமலம்போல் முகமும் காணாது
எம்மானை என்மகனை இழந்திட்ட

இழித்கையேன் இருக்கின்றேனே. மகன் காட்டுக்குச் சென்றபின் தந்தைக்கிருக்கம் தவிப்பு, சோகம், ஏக்கம் போன்ற பல உணர்ச்சிகளின் கொந்தளிப்பை நாம் அவரது பாடல்களிற் கனாலாம். நான் இப்பொழுது போக வேண்டிய காட்டுக்கு மகன் போவது தகுதியோ என்று சுமந்திரனிடமும் வசிட்டனிடமும் முறையிட்டுப் புத்திர சோகத்தால் துடிதுடிப்பதை உணர்ச்சிக்கு குரலுடன் வெளியிடுகின்றார்.

பூமருவி நறுங்குஞ்சி புன்சடையாய்ப்
புனைந்துபூந்துகில் சேரல்குல்
காமரெழில் வழிலுடுத்துக் கலனணியா
தற்கங்களழகு மாறி
ஏமருதோளென் புதல்வன் யானி ன்று

செலத்தக் கவனம்தான் சேர்தல்
தூமறையீர் இது தகவோ சுமந்திரனே
வசிட்டனே சொல்லீர்நீரே

குழந்தையைத் தாலாட்டுவது சிறந்த இன்பம் தருவது அந்த இன்ப நிலையை இன்பத் துடிப்பை அவரது பாசுரங்கள் புலப்படுத்துகின்றன. குலசேகரர் கண்ணனைப் பற்றிப் பாடிய பொழுது கண்ணன் தாலாடினை இழந்த தேவகியின் ஏக்கத்தை, புலம்பலை புலப்படுத்.'.தியவர் பின்பு இராமனைத் தம் வாயாரத் தாலாட்டுகின்றார். இத்தாலவாட்டில் இராமகாதையே இடங்கி விடுகிறது. இப்பதிகத்தை ஆழ்வார் கண்ண புரத்தில் உள்ள இறைவன் மேல் பாடியதாகவே அமைக்கின்றார். கோசலையின் மணிவயிறு வாய்த்து, அயோத்தியில் பிறந்து, தாடகை உரம் உருவி, சனகன் மருகனாகி, மைதிலியின் கணவனாகி, வாலியைக் கொன்று, இளைய வானரத்துக்கு அரசளித்து, அலைகடலைக் கடந்து, இலங்கையை அழித்து, இளையவருக்கு அருள் செய்து அயோத்தி திரும்பிய அரங்கத்தும் கணபுரத்தும் வாழும் கண்மணியே' எனக் கூறித் 'தாலேலோ' சொல்லும் போது அவரது தாய்மை அன்பை உணர முடிகிறது. கண்ணன் என்னும் தெய்வக் குழந்தையின் தோற்றம் ஆழ்வார் பலரின் உள்ளங்களில் நிலை கொண்டிருந்தது போல் குழந்தை இராமனின் தோற்றம் நிலை பெற்றிருக்கவில்லை. எனவே இராமனைத் தாலாட்டும்போது குழந்தை இராமனைக் காணவில்லை. ஆழ்வாரின் 'தாய்மை' அன்பினையே காண்கிறோம்.

குலசேகரர் கடைசிப் பதிகத்தில் தில்லைத் திரச்சித்திர கூடத்து இறைவனைப் பாடுமுகத்தான் இராமாயத்தையே முறைப்படுத்திக் காட்டுகின்றார். பாடல்களின் முற்பகுதி அனைத்தும் இராமனைக்குறிக்க பிற்பகுதி திருச்சித்திரகூடத்தையும் ஆழ்வார் வேண்டுகோளையும் காட்டுகிறது. முழு இராமாயணத் தையும் ஆழ்வார் தெளிவாகப் பாடி

முடித்துத் தமக்கு வேண்டிய வரத்தையும் கேட்டுக் கொண்டு உலக மக்கள் அவனை எப்பொழுதும் இறைஞ்ச வேண்டும் என்று வேண்டிக்கொண்டு முடிக்கின்றார். முந்தைய பாடல்களிளெல்லாம் அவனைக் காணப்பெறும் பேறுபற்றியும் அவன் உயர் நிலையினையும் தம் உளநிலையை உற்றார் பெறும் பயனையும் காட்டி இறுதியில் அவன் வைகுந்தம் சென்ற சிறப்பையும் அவனை உலகம் வணங்க வேண்டிய இன்றியமையாமையையும் கூறி மங்கள வேண்டுகோளோடு முடிக்கின்றார்.

இவ்விதமாக ஆழ்வார் இராமாவதாரத்திலே ஆழந்தித் திளைத்த நிலையிலே அயோத்திராமனைப் பாடிப் பரவிய நிலையினை அவரது பாக்களிலிருந்து அறிய முடிகின்றது. அவரைப் பற்றி வழக்கில் இருக்கும் கதைகளை நாம் நம்பாவிட்டாலும், இராமனிடம் ஆழ்வாருக்கிருந்த ஈடுபாட்டை நாம் நம்பாமலிருக்க முடியாது. இராமனின் அருட்செயல்களையும் பேரருளையும் வியந்து ஏத்தியுள்ள இந்தப் பக்திப் பாடல்கள் பிறகு வந்த கம்பனின் காவியத்துக்கு அடிகோலின. வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவியே கம்பர் தம்நூலை இயற்றிய போதிலும் அதிலுள்ள பக்திச் சுவைக்கு இவரது பாடல்களே வழிவகுத்தன என்று கூறுவோர் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

# மணிவாசகப்பெருமானின் திருவாசகப்பாடலில் வரும் குழைத்த பத்துப் பதிகத்தின் தொடக்கப் பாடற் சிறப்பு

எமது வழிபாட்டின் முக்கிய பண்பான 'இடைவினையுறவு (Interaction) எனும் வகையில் பகவத்கீதை, தி'ருக்குறள் திருவாசகம் எனும் மூன்று நூல்கள் எமது சமய பாரம்பரியத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இவற்றில் முதலாவதான 'கீதை' மனிதன் கேட்க இறைவன் கூறியது. இரண்டாவதன் 'குறள்' மனிதன் கேட்க மனிதன் சொன்னது மூன்றாவதாக திருசாசகம் இறைவன் கேட்க மனிதன் பாடியது. 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்பதைக் கொண்டுதான் இவ்வாறான சித்திரிப்புத் தோன்றியிருக்க வேண்டும்.

திருவாசகத்தை, 'சிவானுபூதிவாசகம்' என்பார் இலக்கிய கலாநிதி மு.கந்தையா (சிவதொண்டன், 1986, பக்.30) திருவாசகம் முழுவதும் பரவியிருப்பது பக்தன் ஒருவனின் பேரின்ப நாட்டம் எனவே குழைத்த பத்தும் அதில் அடங்கும். திருப்பெருந்துறை பின்பு காணப்பெறாமையால் தாயை நினைந்தழும் பிள்ளை திருவாசகப்பாடல்கள் திருவாசகத்திலுள்ள 56 பதிகங்களில் முப்பத்திரரண்டாவதாக 'பிரார்த்தனைப் பத்து' என்பதனைத் தொடர்ந்து வருவதுதான் 'குழைத்த பத்து' எனும் தேன் கலந்து குழைத்த மருந்துப்பதிகம் இது 'ஆத்தும நிவேதனம்' தொடர்பான 'ஆறுசீர்க்கழிநெடிலடி விருந்தும்' எனும் பாவினால் ஆனது. திருப்பெருந்துறைத்தலத்தில் அருளப்பெற்றது. "சொல்லச்சொல்லக் கனிவையும் குழைவையும் கொடுப்பன. குழைத்த பத்துப்பாடல்கள் 'முழுமையிலிருந்து பகுதியை நோக்கி (From the

whole to part) எனும் கற்றல் விதிப்படி இப்பதிகத்தை மேலே 'குழைத்தால்' என்று தொடங்கி பத்தாம் பாடலின் இறுதிச்சீரான குழைத்தாயே' என்பதனுடன் நிறைவு பெறுவதனால்' 'குழைத்தபத்து' என்று பெயர் பெற்றமையும் இப்பதிகத்தின் சிறப்பே.

இனி சிவபுராணத்திலே "சொல்லிய பாட்டின்" பொருள் உணர்ந்து சொல்லுவார். சிவபுரத்தின் உள்ளார் .சிவனடிக்கீழ் செல்வர்" என்று மணிவாசரை கூறியபடி பாடலை நோக்கலாம்.

"குழைத்தால் பண்டைக் கொடுவினை நோய்
காவாய் உடையாய் கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே"

என்று இப்பாடல் பொருள் காண்பதற்கு இலகுவான முறையில் பதச்சேதஞ்செய்து கொடுத்திருக்கின்றேன்.

**இப்பாடலின் பொருள் வருமாறு**

உமையின் மணவாளனே! இளம்பிறையினைச் சடையில் தாங்கியவனே! தந்தையே!

பழைய தீவினையாகிய வியாதி என்னை வாட்டினால் என்னைக் காப்பாற்றுவாயாக தீவினையினை உடையவனாகிய யான் முயற்சி செய்தல் உறுதியாக பிழை செய்தால் என்னை மன்னித்து (உன் கருணைத் திறத்தால்) அருள வேண்டாமா? ஓலமிட்டழைத்தால் உன் அடியவனாகிய எனக்கு அருள் செய்யாது போவது தகுதியோ?

தத்துவ சாஸ்திரங் கூறும் இறைவன் அவன் சக்தி, திருவருள், வினை எனும் கருத்தியல்கள் விளக்கம் பெறுகின்றன. தமிழிலே உள்ள உணர்ச்சிப் பெருக்குள்ள பாடல்களில் முதலில் வைத்தெண்ணப்படுவது திருவாசகம் எனும் விவரிப்புக்கு இப்பாடல் நல்ல பதச்சோறு என்பது தெரிகின்றது. நாட்டுப்பாடல் முறைகளை கையாண்டு பக்தியைச் சிறப்பான முறையில் இப்பாடலிலே மணிவாசகர் வெளிப்படுத்தியுள்ளார். உறுதியுண்டோ? 'பொறுக்க வேண்டாவோ? எனும் வினாக்கள் இறைவன் மீதான பக்தனின் நெருக்கமான இன்புரிமையினையே காட்டுகின்றன. 'பிறைசேர் உடையாய் முறையோ? என்று கேட்பதும் அர்த்தம் பொதிந்த தொன்று" சிவனை மதியாமல் தக்கனின் யாகத்துக்குச் சென்ற சந்திரனை மன்னித்தருள் புரிந்த நீ, உன்னடியவனாகிய எனது பிழையினை மன்னித்தருள் புரியாதிருப்பது நீதியா? என்ற வினா கடையனையும் உய்தி பெறவைப்பது.

பொருள்நலம் மாத்திரமன்றி குழைத்தால், உழைத்தால், பழைத்தால், அழைத்தால் என்று வரும் சீர்களிலே மோனை எதுகைச்சிறப்புக்களையும் காண்கிறோம்.

வாழ்க்கையில் இலக்கு இறைவனை அடைதல். அதற்குத் தடையாக இருப்பது மலக்கட்டு அதனை அறுப்புதற்குரிய சிறத் வழிகளில் ஒன்று இறைவனை மனமுருகப் பாடிப் பரவுதலாகும். 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்பதற்கான நல்ல கலங்கரை விளக்கபாடலாக இது அமைகின்றது.

# கந்தபுராணம் காட்டும் அறவியல்

ந.லிங்கேஸ்வரன்
3ம் வருடம்
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பண்டைத்தமிழர் தம் வாழ்வில் அறக்கொள்கையை பின்பற்றி வாழ்ந்தனர். அறம், பொருள், இன்பம், வீடு என்று வாழ்வியல் கொள்கைகளை வகிக்கும் பொழுதும் அறத்திற்கே முதன்மை கொடுத்தனர். மனித சமுதாயத்தில் அன்றாட வாழ்வில் நடைமுறைக்கு ஏற்றவகையில் நலம் விளையக்கூடிய செயல் எதைச் செய்தாலும் அது அறச்செயலாகும். அறம் என்றால் தொண்டு, தூய்மை என்பது பொருளாகும். இத்தொண்டை எக்காரணம் கொண்டும் சுயநலம் கருதாமல் பொதுநலம் கருதியே செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக

"அறம் செயய் விரும்பு" (ஆத்திசூடி)என்று ஔவையாரும்

"அன்றறிவோம் எண்ணாது அறஞ்செய்க......" (திருக்குறள்) என்று வள்ளுவரும் கூறியுள்ளார். இவ்வாறுபழங்காலம் தொட்டு எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் ஏதாவது ஒரு வகையில் அறிவுரையை வலியுறுத்தும் நோக்கில் படைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சிவபுராணங்களுள் தமிழிற் சிறந்தவை சிவபிரானது முக்கண்ணாகத் துலங்கும் பெரியபுராணம், கந்தபுராணமும், திருவிளையாடற்புராணம் என்பனவாகும். இம்மூன்றின் மிகவும் பரந்து பெரும்காப்பியக்கடலாய் நிலவுவது கந்தபுராணமே. கந்தபுராணம் பரம்பொருளாகிய சிவனுடைய முழுமுதற் தன்மையையும், அவன்

அம்சமாகத் தோன்றிய கந்தப்பெருமானின் அற்புதங்களையும் எடுத்து விளக்குகின்றது. கி.பி 12ம் நூற்றாண்டில் குமரக்கோட்டத்து கச்சியப்ப சிவாச் சாரியாரால் எழுதப்பட்ட தமிழர் காவியமே கந்தபுராணம். சொற்பொருட் சுவையும், பக்திச்சுவையும் கொண்ட இக்காவியம் 10,345 பாடல்களையும் 91 படலங்களையும் கொண்டு உற்பத்திக் காண்டம். அசுர காண்டம், மகேந்திர காண்டம், தேவ காண்டம், யுத்த காண்டம், தட்ச காண்டம், என்ற ஆறு காண்டங்களையும் கொண்டமைந்துள்ளது.

கந்தபுராணத்தில் இல்லாதது வேறு எந்த புராணத்திலும் இல்லை என சிறப்பிக்கப்படும் வகையில் மனித வாழ்விற்கு தேவையான பல நல்லறக் கருத்துக்களை போதிக்கின்றது. அவை தொடர்பாக ஆராய்ந்து நோக்கின.

மனிதர்கள் யாவருமே பிறரில் தங்கி வாழ்பவர்களாகவும் பிறரைத் தாங்கி வாழ வேண்டியவர்களாகவும் உள்ளனர். இதனாலே ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வது என்பது தவிர்க்க முடியாததாகின்றது. இதனாலேயே சைவ மக்கள் அன்று முதல் இன்றுவரை செய்நன்றி என்னும் நற்பண்பை உயிர்போல் போற்றி வருகின்றனர். செய்நன்றி மறத்தலால் ஏற்படும் தீயவிளைவுகளைக் கந்தபுராணம் அழகாக எடுத்துக்காட்டுகின்றது. சூரபன்மன் தனக்கு வரந்தந்து வாழ்வு தந்த சிவபெருமானுடைய திருக்குமாரனை வணங்கி நன்றி பாராட்டாது தன் ஆணவத்தினாலும் செய்நன்றி மறந்ததினாலும் அடைந்த பெரும் கேட்டினை கந்தபுராணம் உலகமாந்தர்க்கு அழகை எடுத்துரைக்கின்றது. பாவங்களில் எல்லாம் மிகப்பெரிய பாவம் செய்நன்றி மறத்தலாகும்.

இதனை வள்ளுவர்

"நன்றி மறப்பது நன்றன்று நன்று அல்லது
அன்றே மறப்ப துநன்று" என்ற குறளினூடாக விளக்குகிறார்.

மேலும் தர்மத்தின் முக்கியத்துவம் அழகாக எடுத்துரைக்கப் படுகின்றது. உலகில் அதர்ம செயல்கள் தலைதூக்கி, தர்மம் தடுமாறும்போது நல்லவர்களை காப்பதற்காகவும் தீயவர்களை அழிப்பதற்காகவும் யுகங்கள் தோறும் அவதாரம் செய்வதாக பகவான் கிருஷ்ணர் கூறிகின்றார். அதுபோல் மக்கள் துன்பங்க ளைப் போக்க இறைவன் ஏதோ ஒரு வடிவில் உலகில் அவதரிப்பதையே அவதாரம் என்பர். சூரபத்மன் என்ற அசுரனிடம் இருந்து மக்களை காக்க சிவபெருமானின் நெற்றிக் கண்ணி லிருந்து தோன்றியவர் முருகப்பெருமான். தர்மம் எது பேச்சுக் குரிய உபதேசத்திற்கு மட்டும் உரிய ஒன்றல்ல. இந்து தர்மம் வாழ்ந்து அனுபவிப்பதற்குரிய உரைக் கல்லாகும். இது இம்மை மறுமையாகிய இருமை இன்பத்தையும் எளிதிற் பயப்பது.

இதனைக் கந்தபுராணம். "தருமம் என்றொரு பொருள் உளது தாவிலா எனும் பாடலினூடாக விளக்கியுள்ளது.

அற ஒழுக்கம் பேணுவோனை அந்த அறமே காப்பாற்றும். அது ஒருபோதும் அவர்களைக் கைவிடாது. "தர்மம் தலைகாக்கும்" என்ற முதுமொழிக்கும் அதுவே காரணமாயிற்று. அறவழியைக் கைவிட்டவனுக்கு அறமே கூற்றவனுமாகும். இக்கருத்தினையே

"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றாகும்" என சிலப்பதிகாரமும்

" ஊழ் வினை உறுத்து வந்தூட்டும்" எனத் திருக்குறளும் எடுத்தியம்பியுள்ளமை தர்மத்தை மீறுவோருக்கு விதிக்கப்பட்ட எச்சரிக்கைகளாகும் எனவும் கொள்ள முடிகின்றது.

கந்தபுராண அசுர காண்டம் காசிபன் உபதேசப்படலம். காசிபன் தனது மகளுக்கு அறத்தைப் போதிப்பதாகவே அமைகின்றது. இதனை

"அறத்தை ஆற்றுதிர் தீவினை விலக்கதிர் எனவரும் அடிகள் தெளிவுபடுத்துகின்றது. காசிபர் உபதேசம் உண்மையான தருமத்தை அடிப்படையாகக் கொண்டு சிவன் அருள் பெற்று முக்தி இன்பத்தை அடைகின்ற நிலையைப் பேசுகின்றது.

ஓர் உயிரானது அறத்தைச் செய்யுமாயின் அதனால் அன்பும் அருளும் பெருகும். தவம் உண்டாகும். தவம் உண்டாயின் உயிர் சிவபிரானை அடையும். அவ்வாறு அடையிற பிறவிக்கு காரணமான மலங்களின்றும் நீங்கிப் பேரின்பத்தை அனுபவிக்கும். ஆகவே தவம் போல் உயர்ந்தது வேறொன்றும் இல்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவம் செய்து முத்தி இன்பத்தைப் பெற்றவர் சிலர். இருமை இன்பத்தையும் பெற்றவர் சிலர். இருமை இன்பதுக்கம் ஏதுவாக உள்ள தவத்துக்கு நிகர் தவமேயாகும். ஆதலால் பிள்ளைகளே நீங்கள் தருமத்தைச் செய்யுங்கள் பாவத்தை விலக்குங்கள் .சிவபிரானை எண்ணிப்பெருந்தவம் இயற்றுங்கள். தவம் செய்வோர் நல்வாழ்வு பெறுவர். அடைந் தாரைக் காப்பர். பகைவரை அழிப்பர். விரும்பியன அடைவர். நித்தராய் இருப்பர். எனவே அருமையாக கிடைக்கத்தக்க பொருள் தர்மம் என காசிபர் விளக்குகிறார். மேலும் எதிர்காலத்திலே பெருமக்களாக வாழ வேண்டும் எனின் தர்மத்தின் வழியே காலடி எடுத்து வைக்க வேண்டும் என்கிறார்.

கந்தபுராணத்தின் யுத்தகாண்டம், சூரபன்மன் வதைப்படலத் தில் தீய செயல்களைச் செய்தவர். ஆயினும் குமரன் முன் உற்றால் தூயவராகி வீடுபேற்றை அடைவர் என்ற கருத்து முன்வைக்கப்ப டுகின்றது. இதனை

"தீயவை புரிந்தோரேனும் குமரவேள் திருமுன் கூற்றாக தூயவர் ஆகி.........." எடுத்துரைக்கின்றது.

மேலும் கந்தபுராணமும் கம்பரமாயணமும் ஒப்பு நோக்கத்தக்கவை. இராவணன் படை இழந்து, குடை இழந்து, "இன்று போய் போருக்கு நாளை வா" என உயிர் கொடுக் கின்றான். இவ்வகையில் நிராயுதபாணியாய் நிக்கும் இராவண னுக்கு உயிர் கொடுத்த பெருவள்ளலாக இராமனைக் காட்டகிறார். கம்பர். இவரைப்பின்பற்றி கச்சியப்பர் முருகனைப் படைப்பது குறிப்பிடத்தக்கது. சூரன் படை இழந்து நிராயுதபாணியாய் நிற்கும் வேளை முருகன்

"நெடிய தாரகன் செற்றவேல் இருந்தது நின்னை" இப்பாடலில் நிராயுதபாணியாய் நிற்கும் பகைவனைக் கொல்லுதல் தர்மத்தின் வழி அன்று எனக் காட்டுகின்றார். இராமன் வழியே முருகனும் அறநெறி நின்றான் என்ற கருத்து இங்கு நிலைநாட்டப்படுகிறது.

மேலும் கந்தபுராணம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்கள் பற்றிக் கூறுகின்றது. அறம் பற்றிக் கூறுகையில் முருகன் படையெடுத்து வந்துள்ள செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த சூரபன்மன் அமைச்சரவையைக் கூட்டி ஆலோசனை கேட்கும்போது சிங்கமுகன் சூரபன்மனைப் பார்த்து "பொருந்திப் படைத்த நீ அறத்தால் அரசுரில் சிறையில் வைத் தாய்" என்கிறான். இறுதியில் தேவரைகளை விடுதலை செய்தால் நீயும் உன் குலமும் வாழும் என்ற அறிவுரை கூறுகின்றான்.

பொருளின் சிறப்பு பற்றி கந்தபுராணம் கூறுகையில் அறிவினை உடைய உயிர்கள் பிறவியால் அடையும் பயன் கல்வியும் செல்வமும் ஆகும். அவற்றுள் ஒன்றை அடையாத பிறப்பு பேய்ப பிறப்பை போன்றதாகும். இதனை பிறந்த நல்லுயிர்க் கெலாம் பெருமை நல்கிய...." என்ற பாடலினூடாக கல்வியும் அதனால் அடையும் செல்வமும் உயர்ந்தது எனக் குறிப்பிடுகிறார்.

மனித வாழ்க்கையின் இலட்சியம் இன்பமாக இருப்பது தான். துன்பத்தை யாரும் விரும்புவது இல்லை. சிவபெருமான் பார்வதியை இருமுறை திருமுறை கொண்ட செய்தி இக்காப்பியத்தில் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. உலகுயிந்திடவே எம்பிரான் மணம் புரிந்து கொள்கின்றான். முருகப்பெருமானால் சூரபன் அடக்கியாளப்பட்ட பின் தேவநலக ஆட்சியைப் பெற்ற இந்திரனுக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகின்றது. தவத்தை மேற்கொள்ள நினைக்கிறான். அப்பொழுது வியாழ பகவான் உலகப்பற்று உண்டாக, உலகாயத்தின் கொள்கைளை எடுத்துரைக்கின்ற ஆண், பெண் அனுபவிக்கும் இன்பமே உண்மையாக இன்பம் எனவும் அதனை விடுத்துத் துறவில் இடம்பெற நினைப்பது. "கையிலுள்ள அமிழ்த்தினை விட்டு விட்டு, காணல் நீரை விருபுவது போன்றதாகும் என இன்ப நிலை பற்றிக் கூறுகின்றார்.

வீடு பேறு பற்றிக் கூறுகையில் யான் எனது எனும் அகப்புறப் பற்றுகளைத் துறந்து இறைவன் திருவடிகளை அடைவதற்கு முருகன் வீடுபேறு அருள்வான் என்பதனை அழிவில் வீடும் போற்றினர்க்கு அருளவல்லான்" என்ற தொடரில் அறிவுறுத்துகிறார் கச்சியப்பர். நாம் தீயவர்களாக இருந்தாலும், முருகன் திருவடியை அடைந்துவிட்டால் போதும். அவன் நம்முடைய அழுக்கைப்போக்கி நம் தகுதிக்கேற்ப ஆளாக்கிக் கொள்வான். இதற்கு சூரபன்மனே சான்று என்கிறார் கச்சியப்பர்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்கின் கந்தபுராணத்தில் இல்லாதது வேறு எந்த புராணத்திலும் இல்லை என்று கூறும் வகையில் மனித வாழ்விற்குத் தேவையான நல்ல அறக்கருத்துக் களையும் நாற்பொருள்களையும் அவற்றை அடைவதற்கான வழிகளையும் போதிக்கின்றது.

# திருப்பாணாழ்வார் காட்டும் கண்ணனின் அழகுக்கோலங்கள்

கட்டுரையாக்கம்
தமுநய மொழியருவி
வேல் நந்தகுமார்
விரிவுரையாளர், கோப்பய் ஆசிரிய கலாசாலை)

வைணவ பக்தி நெறி வரலாற்றிலே கிருஸ்ண பக்தியில் ஆழ்ந்து ஈடுபட்டவர்களாக அவரது பல்வேறுபட்ட அவதாரச் சிறப்புக்களை பாசுரங்களாக வெளிப்படுத்திப் பாடியவர்களாக ஆழ்வார்கள் விளங்குகின்றனர். இவ் ஆழ்வார்களின் தோற்றத்தை நாம் சங்கமருவியகாலப் பிற்பகுதியில் தோன்றிய முதல் மூன்று ஆழ்வார்களான பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் ஆகியோர் இயற்றிய திருவந்தாதிகளாக அமையும் பாசுரங்கள் வழி அறியலாம். பின்னர் பக்திநெறிக் காலமாகிய பல்லவர் காலத்தில் ஒன்பது ஆழ்வார்கள் தோன்றினர். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகைகளில் தம் பாசுரங்கள் வழி கண்ணனைப் பாடினர். பாவனை பக்தி அடிப்படையிலேயே அவர்களது பெரும்பாலான பாடல்கள் அமைந்தன. இப்பாடல்கள் அனைத்தும் நாதமுனிகளால் நாலாயிர திவ்வியப் பிரபந்தமாக தொகுக்கப்பட்டது. இந்தவகையில் பல்லவர் காலத்தில் தோன்றிய ஒரு ஆழ்வாரே திருப்பாணாழ்வார் ஆவார்.

திருவரங்க திருத்தலத்திற்கு அருகே தீண்டத்தகாத பாணர் சேரியில் பிறந்து எம்பெருமான் ஸ்ரீரங்கநாதனை வீணையிசையோடு

மெய்யுருவப் பாடும் பக்தி மிக்கவராய் விளங்கிய இவர் தன் சாதி நிலை கருதி ஸ்ரீரங்கப்பெருமானை மறைந்திருந்தே வழிபட்டு வந்தார். ஒருநாள் சுரங்க முனிவர் நீரெடுக்க வந்தபோது அந்த இடத்தை மறைத்துக் கொண்டு திருப்பாணாழ்வார் நிற்பதைக்கண்டு கோபம் கொண்டு ஒரு கல்லை எடுத்து அவர் நெற்றியில் ரத்தம் வடிந்தது. பின்னர் சாரங்க முனிவரின் கனவில் தோன்றிய பெருமான். திருப்பாணாழ்வாரை தோளிலே தூக்கித்தன் சந்நிதானத்துக்கு அழைத்து வருமாறு கூற அவ்வாறே தன் தவறு உணர்ந்த சாரங்க முனிவரும் அவரைத் தோளில் சுமந்து வந்து ஸ்ரீரங்கப் பெருமானுக்கு அருகில்விட இவ்வளவு காலமும் மறைந்து இருந்து பார்த்து வழிபட்ட பெருமானை நேரிலே அருகிலே பார்த்த பரவசத்திலே திருப்பாணாழ்வார் கண்ணனுடைய ஒவ்வொரு அங்கங்களையும் ரசித்து பக்தியுணர்வுடன் பாடிய பாடல் கவிதை "அமலன் ஆதி பிரான்...." எனத் தொடங்கும் இவரது பாசுரங்கள் ஆகும். கண்ணனின் அங்கங்களைப் பாடும் இம்மரபை ஏற்கனவே பெரியாழ்வார், ஆண்டாளும், திருவங்க மாலை பாடிய ஆழ்வாரும் பின்பற்றிய நிலையில் அவற்றில் இருந்து வேறுபட்ட முறையில் முதலில் திருக்கமலபாதம் பாடி தன் பாசுரத்தை தொடக்கியதுடன் பிரணவத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் என்ற மூன்று திருவெழுத்துக்களுள் முதல் எழுத்தாகிய அகரத்தை முதல் பாசுரத்திலும் இரண்டாம் எழுத்தாகிய மகரத்தை மூன்றாம் பாசுரத்தின் முதலிலும் முறையே அமைத்துப் பாடியுள்ளமை சிறப்புக்குரியதாகும். இப்பத்துப் பாசுரங்களையும் பாடிய முடிவில் திருப்பாணாழ்வார் அனைவரும் காணும்படி திருவரங்கப்பெருமானின் திருவடிகளில் உட்புகுந்து அவரோடு இரண்டறக் கலந்தார் என்றும் கூறப்படுகிறது.

இனி திருப்பாணாழ்வாரின் அமலன் ஆதிபிரான் எனத் தொடங்கும் பாசுரங்கள் வழி அவர் கண்ணனின் அழகுக் கோலங்களை எவ்வாறு சித்தரித்துள்ளார் என நோக்குவது பொருத்தமுடையதாகும். இப்பாடல்கள் பாதம், ஆடை, உந்தி, உதரபந்தமனம், மார்பு, கழுத்து,

வாய், கண்கள், உடல், தலை ஆகியவற்றின் வடிவழகையும் குண அழகையும் அற்புதமாகக் காட்சிப்படுத்துகின்றன.

"நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதில் அரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்து என் கண்ணின்
உள்ளன ஒக்கின்றதே"

எனத் திருவரங்கப் பெருமானின் திருவடி அழகைப் போற்றுகின்றார்.

பின் அரைச்சிவந்த பீதாம்பர ஆடை அழகைப்போற்றுகிறார்.
பின் உந்தி அழகைச் சொல்லுகையில்
அந்திபோல் நிறத்தாடையும் அதன் மேல்
அயனைப் படைத்தோர் எழில் உந்தி மேலதன்றோ இன்னுயிரே"

என்று போற்றுகிறார்.

கண்டத்தழகு பற்றிக் கூறுகையில்
"அண்ட பகிரண்டத்து ஒருமாநிலம்
எழுமால் வரை முற்றும்
உண்ட கண்டம் கண்டீர் அடி
யோண உய்யக் கொண்டதே" என்கிறர்
கண்ணழகை வர்ணிக்கையில்
"கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து
செவ்வரியோடி நீண்ட அப்
பெரியவாய கண்கள் என்னைப்
பேதமை செய்தனவே" என வர்ணிக்கிறார்
பின்னர் கண்ணனின் நீலமேனி அழகை

"கோலமா மணியாரமும் முத்துத் தாமமும்

முடிவில்லதோர் எழில்

நீலமேனி ஐய்யா

நிறை கொண்டது என் நெங்சினையே" என்கிறார் இங்கு கம்பன் மையோ மரகதமோ மறிகடலோ என வர்ணித்த வர்ணனை ஒப்பு நோக்கத்தக்கதாய் விளங்குகிறது. நிறைவில் அமுதம் போன்ற அவனைக்கண்டுசேவித்த என் கண்கள் வேறொன்றையும் காணாது என முடிக்கிறார். இப்பாடல்களில் கண்ணனின் பல்வேறுபட்ட நாமப்பெருமைகள் லீலைகள், அவதாரப் பெருமைகளையும் அவர் எடுத்துக் காட்டத்தவறவில்லை. அவ்வகையில் அமலன், ஆதிபிரான் அரங்கத்தம்மான், மாயன், கொண்டல்வண்ணன், வெண்ணெய் உண்ட வாயன் எனப் பலவாறு பல்வேறுபட்ட நாமப்பெருமைகளால் கண்ணன் இங்கு சிறப்பிக்கப்படுகிறான். அத்துடன் தன்னை எதிர்த்த அசுரர்களை அழித்த ராமன், ராவணன் முதல்நாள் போரில் தோல்வியுறச் செய்தவன், இரணியனின் குடலைத் தன் நகங்களால் கிழித்த நரசிங்கன் ஏழு உலகங்களையும் தன் வயிற்றில் அடக்கியவன் என அவனது லீலைகளும் அவதாரச் சிறப்புக்களுக்கும் திருப்பாணாழ்வாரால் இப்பாசுரத்தில் கண்ணனின் அழகுக் கோலச் சித்திரிப்பில் இணைத்துக் கூறப்பட்டுள்ளமையாலும் சிறப்புக்குரி யதாகும்.

# இன்றைய உலகில் இந்து சமய பண்பாட்டு அம்சங்களை மறக்கிறார்களா? மதிக்கிறார்களா?

தி.நடனசபை (ஆசிரியர்)
மு/உடையார்கட்டு ம.வி
புத்தூர்

நவீன வளர்ச்சிப் போக்கில் எமது நாகரீகமானது பல நோக்குகளில் சென்று கொண்டிருக்கிறது. அந்த வகையில் எமது இந்து வாழ்வும், இந்து பண்பாட்டு பழக்க வழக்கம் யாவும் இன்றைய உலகிற்கு ஏற்ப இரண்டறக் கலந்துவிட்டது. இதனால் எமது இந்துப் பண்பாடு அழிந்துவிட்டதென்றே சொல்லலாம். ஆனாலும் வாழ்வுதான் திண்ணம் என எண்ணினாலும் எமது மனிதன் இந்து மரபு வழிபாட்டை என்றும் மறக்கவில்லை. இவற்றை மதிக்காவிட்டாலும் இன்றைய எமது இந்து மக்கள் பின்பற்றிக் கொண்டே இருக்கின்றார்கள்.

விசித்திரமான இந்த உலகில் சினிமா மோகமும் மேனாட்டவர் ஆதிக்கமும் பல்கிப் பெருகிக் காணப்படும் வேளையில் அழியாச் சொத்தாக விளங்கும் எமது மரபு வழிப்பண்பாட்டை பேணுவதன் ஊடாகவும் எமது கலை கலாச்சார விழுமியம் பேணப்பட்டு வருகின்றன நம் கண்கூடே காணக்கூடியதாக உள்ளது எனலாம்.

ஆண்டாண்டு காலமாக ஆண்ட தமிழ்க்குடி எமது குடி அவ்வாறாக தமிழர்தம் குடியில் எழுந்ததே இந்து சமயம் இவ்வாறான சிறப்புமிக்க எமது இந்த பாரம்பரியம் மிக்க எமது மதத்தை மதித்து நடக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

இன்று நாம் ஆலயத்தில் உரிய முறைகளில் கிரியை நடாத்தும் ஆலய மரபு வழிப்பண்பாட்டு விழுமியங்களை கட்டிக்காத்து பேணுதல் வழிபாட்டு நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்றுதல் நவீன

நாகரீகத்துக்காக எமது நடைமுறைகளை கிரியை ஒழுங்குமுறைகளை பேணாது இருத்தல் போன்ற விடயங்களில் முன் எச்சரிக்கையாக நடந்து எமது இந்து தர்ம முறைகளை பாதுகாத்து நடத்தல் வேண்டும்.

எவ்வாறு வாழ்ந்தாய்? எதை சாதித்தாய்? எதனை நிறைவேற்றினாய் என்பது முக்கியமல்ல எமது வாழ்வில் எத்தனை சமயவிடயங்களை பாதுகாத்து வளர்த்தாய் என்பதுதான் நாம் காணுகின்ற முக்கியமான விடயமாகும். அந்த வகையில் இந்து தர்ம வாழ்வில் எமது சமய பண்பாட்டு கலாச்சார விழுமியங்களை சமூக நடத்தைகளுக்கு இயைவாக வளர்த்துக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

இன்றைய உலகில் எமது இளைய தலைமுறை குறிப்பாக இளைஞர்கள் சுபபோக ஆசையை நம்பி தம்மை மறந்து தமது வாழ்வில் இருந்து நளுவுகின்றார்கள். இதனை தடுப்பதற்கு ஒரே வழி அவர்களை ஆன்மீக மயமாக்கல் ஆகும். அவர்களை எவ்வாறு எமது சிந்தனைக்கு உட்படுத்துதல் என்பது அறியாத புதிராக உள்ளது.

இன்றைய எமது சமூக நிறுவனங்களில் இன்றைய இளைஞர்களை முன்னிலைப்படுத்தி அவர்களை எமது அமைப்புக்களுக்கு தலைமைத்துவத்தைக் கொடுத்து அவர்கள் வாழ்வியலை நன்நெறிப்படுத்த வேண்டுவதோடு ஒரு நிலைக்கு நாம் உட்பட்டிருக்கின்றோம்.

அவ்வாறு நாம் செய்யவில்லை என்று சொன்னால் எமது இந்து தர்மம் இந்து மதம் மதிக்கப்படவும்மாட்டாது. மதிக்காவிட்டாலும் (பறவாயில்லை) மறந்து விடாமல் இருத்தல் வேண்டும்.

ஆகவே இந்த உலகில் இந்து மத பண்பாட்டு பழக்கவழக்கம் கலாச்சாரம் என்பவற்றை மறக்காமல் இருப்பதற்கு இன்றைய இளைய தலைமுறைகளை முன்னிலைப்படுத்தும் எமது தரம்மிக்க இந்துமத பெருமையை உலகில் நிலை நிறுத்துவோம் என திடசங்கற்பம் பூணுவோம்.

இன்றைய உலகில் இந்து பண்பாட்டு பழக்க வழக்கம் மதிக்கப்படாவிட்டாலும் கூட அவை மறக்கப்படாமல் பேணப்பட்டுவருகிறது. அவை எமது உலகளாவிய வகையில் பின்பற்றப்படுகின்ற ஒன்றாகும். ஆகவே எமது இந்துமத சிந்தனைகளை மதித்து மறக்காது நல்வாழ்வு வாழ்வோம்.

# விஸ்ணுபகவான் கொண்ட பத்து 10 அவதார மகிமைகள்

## தர்மத்தின் திருநிலை:-

ஆக்கம்:- அன்னையூர் தயாபரன்

பிரபஞ்ச இயக்கத்தில் இறைசக்தி முதன்மைபெறுகின்றது. அதனடிப்படையில் உலகில் படைத்தல், காத்தல், அழித்தல், எனும் செயற்பாடுகள் இயல்பாக நடைபெறுவது அவசியமாகின்றது. உலகெங்கும் பரந்துள்ள இறை சக்தியின் சங்கதியே மேலே குறித்த முத்தொழில்களையும் மேற்கொள்கின்றது. அவ்விதமே படைத்தல் தொழிலை பிரம்ம தேவனும், காத்தல் தொழிலை மகாவிஸ்ணுவும், அழித்தல் தொழிலை உருத்திரனும், தத்தம் நிலையில் நின்று புரிகின்றனர்.



இதில் உலகில் உள்ள உயிர்களின் நலனைப் பாதுகாத்து அதர்மம் தனை அழித்து தர்மத்தை நிலைநிறுத்தும் பெரும் பணியை காத்தல் தொழில் புரியும் மகாவிஸ்ணு மேற்கொண்டு வருகின்றார். இதனை பகவத் கீதையில் குறிப்பிடும் போது "எப்போது எல்லாம் பூமியில் தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்கிகிறதோ அப்போது நல்லவர்களைக் காப்பதற்கும் தீயவர்களை அழிப்பதற்கும்

தர்மத்தை உலகில் நிலைநிறுத்துவதற்கும் யுகம் தோறும் நான் அவதாரம் எடுக்கின்றேன்" என பகவான் கிருஸ்ணன் கூறியுள்ளார். இதன்படி யுகம் தோறும் பற்பல அவதாரங்களை பகவான் விஸ்ணு மேற்கொண்டுள்ளார்.

*அவதாரச் சிறப்பு: -*

இந்தச் சந்தர்ப்பங்களில் பகவான் கிருஸ்ணன் அவதாரம் எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அவற்றுள் முதன்மையான பத்து அவதாரங்களை புராணங்கள் வரையறுத்துக் குறிப்பிடுகின்றன. அவை குறித்து இன்னும் விரிவாகப் பார்ப்போமாக,

*1. மச்ச அவதாரம்*

விஸ்ணுவின் முதலாவது அவதாரமாக குறிப்பிடப்படுகின் றது. மச்சம் என்றால் "மீன்" உனப் பொருள்படும். உடலின் மேல்பாகம் நான்கு கரங்களுடனும் தேவ சொரூபத்துடனும் கீழ்ப்பாகம் மீனின் உருவம் பொருந்தியதாகவும் இவ்வடிவம் சிறப்புறுகின்றது. சோமுகாசுரன் எனும் குதிரை முகம் கொண்ட அசுரன் பிரம்மாவிடம் இருந்து வேதங்களைக் கவர்ந்து சென்றான். அந்த வேதங்களை மீட்டெடுப்பதற்காக மச்ச அவதாரம் எடுத்த பகவான் அசுரனைக் கொன்று வேதங்களை மீட்டு பிரம்மாவிடம் ஒப்படைத்தார். மேலும் சத்திய விரதம் எனும் விஸ்ணு பக்தன் வாயிலாக சப்தரிசிகள் மற்றும் பல வஸ்துக்கள் நிரம்பிய படகினை ஆபத்தில் இருந்து காத்தருளினார்.

*2. கூர்ம அவதாரம்: -*

விஸ்ணுவின் அவதாரங்களுள் இரண்டாவது அவதார மாகத் திகழ்கிறது. கூர்மம் என்றால் ஆமை எனப் பொருள்படும். பகவான் விஸ்ணு நான்கு கரங்களுடன் உடலின் மேற்பகுதி தேவ சொரூபமாகவும் இடுப்புக்கு கீழ் உள்ள பகுதி "ஆமை" உருவம் கொண்டும் விளங்கிய அவதார அம்சம்

இதுவாகும். தேவர்களும் அசுரர்களும் பாற்கடல் கடையும் போது மந்தார மலையை மத்தாக வைத்து வாசுகி எனும் பாம்பினை கயிறாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அப்போது மலையானது சமநிலையற்றுத் தடுமாறத் தொடங்கியது. அப்போது விஸ்ணு கூர்ம வடிவம் தாங்கி அம் மலையின் கீழ் சென்று அதனை தன் முதுகில் தாங்கி அதன் சமநிலையையும் பேணினார். பாற் கடலைக் கடையவும் பணி தடையின்றி தொடர வழிவகை செய்தார்.

*3. வராக அவதாரம்:-*

பகவான் விஸஸ்ணு மேற்கொண்ட மூன்றாவது அவதார அம்சமாக வராக அவதாரம் அமைகின்றது. வராகம் என்றால் பன்றி எனப் பொருள்படும். விஸ்ணு உடல் வெள்ளைப் பன்றி வடிவத்தில் தோற்றம் கொண்ட அவதாரமாக இது விளங்குகின்றது. இரண்யா ட்சன் எனும் அசுரன் பூமியை எடுத்துச் சென்று கடலுக்கடியில் மறைத்து வைத்தான் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பகவான் விஸ்ணுவாக வராகவடிவம் தாங்கி இரண்யாட்சனுடன் போரிட்டான். அவனைக் கொன்று பூமியை தன் கொம்புகளுக்கு இடையிலே தாங்கி வெளிவந்தார்.

*4. நரசிம்ம அவதாரம்:-*

பகவான் விஸ்ணு எடுத்த நான்காவது அவதாரமாக இது கருதப்படுகின்றது. நரசிம்மம் என்றால் நரம் சிங்கம் எனப் பொருள்படும். நரம் என்பது மனிதன் அக மனித உருவமும் சிங்க முகமும் கைகளில் சிங்கத்தின் நகங்களையும் கொண்ட வடிவமாக இது விளங்குகின்றது. இரணியன் என்பவன் பிரம்மாவிடம் பெற்ற வரத்தின் காரணத்தினால்

தேவர்களை துன்புறுத்தி வந்தான். மேலும் நரகாசுரனைப் பரம் பொருளாக வழிபட்டு அவரது திருநாமங்களை கூறிவந்த இரண்கசியுவின் மகனான பிரகலாதனைக் காப்பதற்காக கற்தூணில் இருந்து வெளிப்பட்டார். இரண்கசியுவை தன் மடியில் படுக்க வைத்து அவன்வயிறை தன் விரல் நகங்களால் கிழித்து பக்தனாகிய பிரகலாதனை காத்தருளினார் பகவான் விஸ்ணு.

5. வாமன அவதாரம்: -

திருமாளின் ஐந்தாவது அவதாரமாக கொள்ளப்படு கின்றது. வாமனம் என்றால் குள்ளம் எனப் பொருள் உண்டு. அவ்வகையில் பகவான் குள்ளமான வடிவில் தோன்றினார். தேவர்களின் தாயான அதிதிக்கு மகனாகப் பிறந்தார். தெவேந்திரனின் தம்பியாக பிறந்தமையால் குபேந்திரன் எனவும் இவர் அழைக்கப்படுகின்றார். மகாபலி எனும் அரசனின் கர்வத்தை அழிப்பதற்கும் அவனால் தேவர்களுக்கு இழைக்கப்படும் குறைகளைப் போக்குவதற்கும் பகவான் இவ் அவதாரத்தை மேற்கொண்டார். அதன்படி மகாபலியிடம் மூன்று அடி நிலம் யாசகமாகக் கேட்டார். மகாபலியும் அதற்குச் சம்மதம் தெரிவித்தான். பகவான் உடனேயே தன் உருவிலிருந்து வளர்ந்து ஓர் அடியால் பூமி முழுவதையும் இரண்டாவது அடியால் வான் உலகம் முழுவதையும் அளவிட்டார். மூன்றாவது அடியை மகாபலியின் தலையில் வைத்து அவனை பாதாள உலகில் அழுத்தி பாதாள உலகத்தையும் அளவிட்டார். இதனால் திரிவிக்கிரமன் உலகளந்த உத்தமன் எனும் நாமங்களையும் பகவான் விஸ்ணு பெறுகின்றார்.

6. பரசுராம அவதாரம்:-

பகவான் நாராயணனின் ஆறாவது அவதாரம் இதுவாகும். ஜமதக்கினி முனிவருக்கும் ரேணுகாதேவிக்கும் மகனாகப் பிறந்தவர். முனிவரைப் போன்ற தோற்றத்தில் தணிகையில் சிவபெருமான் அருளால் பெறப்பட்ட மருவாயுதம் எனும் கோடரியுடன் காட்சி தருகின்றார். நன்நெறியைக் கொன்ற கவர்த்தவினியாச்சுரனைக் கொன்று அதர்மவழி செல்லும் சத்திய குல அரசர்களை இருபத்தியொரு தலைமுறை தன்மழுவால் கொன்று வீழ்த்தினார். தன்தந்தையின் ஆணைப்படி தன் தலையையும் சகோதரர்களையும் கொன்று பின் தந்தையின் உதவி கொண்டே அவர்களை உயிர்பெற்று எழச்செய்தவர். மேலும் பீஸ்மர், துரோணர், கர்ணன், ஆகியோருக்கு வித்தை கற்பித்த குருவாகவும்விளங்குகின்றார். இன்றும் மரணமின்றி வாழும் ஏழு சிரஞ்சீவிகளில் ஒருவராக மகேந்திரர் வதத்தில் வசித்து வருகின்றார் என்கின்றன புராணங்கள்.

7. ஸ்ரீராம அவதாரம்:-

பகவான் நாராயணனின் ஏழாவது அவதார வடிவம் இதுவாகும். இது திரோதாயுகத்த்திரல் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது. மனித உருவம் தாங்கி பூமியில் அதர்மச் செயல்கள் புரியும் இராவணனையும் அவன் அரக்கர் கூட்டத்தையும் அழித்தார் தர்மத்தை நிலை நாட்டிய அவதார வடிவமாக சிறப்புறுகிறார். தசரன் மற்றும் கோசலை ஆகியோரின் மகனாகப் பிறந்து ஏகபத்தினி விரதனாக அன்பு, விட்டுக்கொடுப்பு, பணிவு, இரக்கம், சகோதர பாசம் ஆற்றல் வீரம் சகிப்புத்தன்மை, என மனித வாழ்வின் அத்தனை அம்சங்களையும் கடைப்பிடித்தார். அதன் வழி மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்ற படிப்பினையை பூமியில் வாழ்ந்து காட்டிய தனித்துவச் சிறப்பினைப் பெறுகிறான். மேலும் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" எனும் வாக்கிற்கிணங்க பதினான்கு ஆண்டுகள்

வனவாசம் சென்று துன்பங்களையும் இன்பங்களாக மாற்றிய அவதார புருசனாகத் திகழ்கிறார். இத்தகைய சிறப்புக்களை உடைய இராமபிரான் அவதார மகிமையை இராமயணம் எனும் இதிகாசம் எடுத்துக் கூறுகின்றது.

8. ஸ்ரீ கிருஸ்ண அவதாரம்: -

பகவான் விஸ்ணு மேற்கொண்ட அவதாரங்களில் சிறப்புடையதாக விளங்குவது கிருஸ்ணாவதாரம்மாகும். இந்த அவதாரம் துவாபர யுகத்தில் நிகழ்ந்தது. தேவகிமற்றும் வசுதேவருக்கு மகனாக சிறைச்சாலையில் பிறந்தார். ஓரிரவில் ஆயர்பாடி கோகுலத்தில் வசித்துவந்த நந்தகோபர் மற்றும் யசோதையின் மகனாக வளர்ந்தார். சிறுவயது முதல் பல லீலைகள் புரிந்த அவதாரமாகச் சிறப்பித்துப் பேசப்படுகிறார். ஆயர்பாடி பிருந்தாவனம் மதுராபுரி, துவாரகை எனப்பல இடங்களில் தன் வாழ்க்கையை வாழ்ந்த கண்ணபிரான் பூமியில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்ட குருசோத்திரப் போர்க்களத்தில் நின்றார்.

பாண்டவர், கௌரவருக்கிடையில் மகாபாரதப் போரினை நடத்தினார் பகவத் கீமையை மொழிந்தார். தர்மத்தின் பக்கம் நின்ற பாண்டவர்க்கு உற்ற நண்பனாக விளங்கினார். அவர்களுக்கு உதவிபுரிந்து போரில் அவர்களை வெற்றிபெறச் செய்தார். தர்மத்தின் வெற்றியை உறுதிப்படுத்திய அவதாரமாக மேன்மையுறுகிறார். இத்தகைய கிருஸ்ண அவதாரச் சிறப்பினை மகாபாரதம் எனும் இதிகாசம் வெளிப்படுத்தி நிற்கின்றது.

9. பலிராம அவதாரம்: -

பகவான் விஸ்ணுவின் எட்டாவது அவதாரமாக கருதப்படு வது இதுவாகும். பகவான் கிருஸ்ணனின் அண்ணனாக வசுதேவ ருக்கும் ரோகிணிக்கும் மகனாக அவதரித்தார். ஆனால் சில இடங் களில் பலராமன்

ஆதிசேடனின் அவதாரம் என்றும் சான்றாதாரங்கள் குறிப்பிடுகின்றன். இருப்பினும் பகவானின் அவதார அம்சமாகவே பலராமரை கருதுகின்றனர்.

*10. கல்கி அவதாரம்:-*

பகவான் விஸ்ணு கலியுக முடிவில் எடுக்க உள்ள அவதாரமே இதுவாகும். ஓர் இளவரசனைப் போல வெள்ளை நிறக் குதிரையில் ஏறிக் கையில் வாள், கத்தி, கேடயம், என்பவற்றை ஆயுதங்களாக ஏந்தித் தோற்றம் பெறச் செய்வார் என புராணங்கள் கருத்து உரைக்கின்றன.

இவ்வாறு பல அவதாரங்களை பகவான் விஸ்ணு எடுத்தாக புராணங்கள் சான்று பகர்கின்றன. அவற்றில் மோகினி அவதாரம் பஸ்மா சூரன் எனும் அசுரனை அழிப்பதற்கும் தேவர்களுக்கு பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தை பகிர்ந்தளிப்பதற்குமாக எடுக்கப்பட்ட அவதாரமாக திகழ்கிறது தவிர தன்வந்திரி அவதாரம் விநாயக்ரீவ அவதாரம் ரிசப அவதாரம் நரநாராயண அவதாரம் எனப் பல அவதாரங்களை பகவான் விஸ்ணு யுகம் தோறும் மேற்கொண்டுள்ளார். இவ் அவதாரங்கள் அத்தனையும் இறைவன் அடியவர்கள் கொண்ட பேரன்பையும் பேரருளின் கருணையையும் எடுத்துக் காட்டுவனவாய் அமைந்து இருக்கின்றன.

அவதாரம் என்பது இறைவன் தன்நிலையிலிருந்து கீழ் இறங்கி வருதல் எனப் பொருள்படும். அவ்வகையில் பகவான் விஸ்ணு தன் வாசஸ்தலமாகிய வைகுண்டத்தில் இருந்து பூவுலகத்திற்கு வருகை தந்து பலவடிவங்களில் தோற்றம் தந்துள்ளார். யுகம் தோறும் உலகில் தீயவர்கள் தம்பலத்தாலும், தம்சக்தியாலும் நல்லவர்களை நலிவடையச் செய்து அதர்மம் புரிந்தனர்.

ஸ்ரீராம ஜெயம்

# ஸ்ரீ ராம ஜெயம்

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

### பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் சேவைகளும் பணிகளும்

பிரதி ஞாயிறு தோறும் அன்னதானம் வழங்குதல்

மஹோற்சவ காலங்களில் அன்னதானம் வழங்குதல்

ஞாயிற்றுக்கிழமைகளில் ஆன்மீக நிகழ்வுகள் நடத்தல்

முதியோர் இல்லம் அமைத்து வருதல்

சமய கலாசார நிகழ்வுகளுக்கு மண்டப வசதிகள் செய்து கொடுத்தல்

திருமண சுப முகூர்த்தங்களுக்கு மண்டபமும் உணவு உபசார நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்தல்

மாணவர்கள் முதியவர்களுக்கான பொருள உதவி வழங்குதல்
போன்றவை குறிப்பிடத்தக்கவை

**நேர்த்திக் கடன் , அன்னாதனப் பணிகள் செய்ய விரும்புபவர்கள் மற்றும் உதவி செய்ய விரும்புபவர்களும் ஆச்சிரமத்துடன் தொடர்பு கொள்ள முடியும்**

**உங்கள் தொடர்புகளுக்கு**
**வை.ஆனந்தராசா**
**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் பெரியாழ்வார் ஆச்சிரமம்**
**07668339590**

| | | |
|---|---|---|
| குகன் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 50Kg அரிசி |
| ஸ்ரீரங்கன் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 20kg அரிசி |
| ஐங்கரன் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 10kg அரிசி |
| S.V முருகேசு | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| ஸ்ரீ முத்துக்குமார் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| சு.பு பிறதர்ஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 10kg அரிசி |
| ஸ்ரீ காமாட்சி ஸ்ரீரோஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 20kg அரிசி |
| மகாலட்சுமி ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி 1மூட்டை பருப்பு |
| சண்முகம் ஸ்ரோஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 10kg அரிசி |
| T.K ரேடர்ஸ் | ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் | 25kg அரிசி |
| வேணி களஞ்சியம் | கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் | 100kg அரிசி 1 மூட்டை பருப்பு |
| லலிதாஸ் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 10000 ரூபா |
| மதுரா நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| கல்யாணி நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| நியூட்டன் வைன் சொப் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 10kg அரிசி |
| லலிதா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| வெஸ்ரன் ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| ஸ்ரீ நதியா | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 2000 ரூபா |
| சுப லட்சுமி நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| மயூரன்ஸ் ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| மதனா நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| கன்னிகை நகைமாளிகை | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| மகாநதி நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| முத்துமாரி நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| ராணி ஸ்ரோஸ் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 ரூபா |
| ஜெனா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| மாங்கல்யா நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 ரூபா |
| கிருஸ்ணா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| ஸ்ரீகாளி நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| நயினை அம்மன் நகைத் தொழிலகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| சிறி சிரஞ்சனா நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 50மூட அரிசி |
| சாரங்கா நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 5000 |
| நியூ சுமங்கலி ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| அம்பிகா நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| சோபனா நகையுகுமு | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 2000 |
| பூரணி நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| சிறிராம் ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| ஸ்ரீலட்சுமி ஜுவலல்றி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| ரூபிகா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| நியு சோபிகா நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1500 |
| கலைவாணி நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 200 |
| நியு யதுசன் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| தங்கத் திருமகள் நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| விஜோ நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 500 |
| நிருத்திகா ஜுவல்லறி | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| சிங்கப்பூர் நகைமாடம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| நித்திய லக்ஸ்சுமி ஜுவல்லறி | இல 87 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| வாணி புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| அன்கிளின் புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| சிவராதா புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |

| | | |
|---|---|---|
| சிவகணேசன் புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 25kg அரிசி |
| த.கு குமாரசுவாமி புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| காவேரி சிங்கஸ் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| கமலேஸ்வரி புடவையகம் | பெரியகடை வீதி யாழ்ப்பாணம் | 50kg அரிசி |
| கணேசன் புடவையகம் | கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் | 30kg அரிசி |
| இராஜேஸ்வரி புடவையகம் | மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் | 1001 |
| விஜய் சில்க்ஸ் | மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் | 500 |
| வே.செல்வரட்ணம் | ஆஸ்பத்திரி வீதி முன்பாக மந்திகை பருத்தித்துறை | 5000 |
| சீமாட்டி புடவையகம் | மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் | 500 |
| வீ.எம்.கே. நகையகம் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | 100kg அரிசி |
| கஜமுகன் ஹாட்வெயார் | ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம் | 25000 |
| ஸ்ரீநதியா நகைமாளிகை | யாழ்ப்பாணம் | 2000 |
| கமல் செரமிக் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 100kg அரிசி |
| சிற்றி ஹாட்வெயார் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1500 |
| நாதன் கட்டிட பொருள் வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| மாவின் கட்டடப்பொருள் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| தரன் மோட்டர்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| ரூபா பல்பொருள் வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 2000 |
| தில்லையம்பதி மோட்டர்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| ஸ்ரீ மகாவிஸ்ணு | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| காந்தி மோட்டர்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| ஏசியன் பெயின்ற் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| கரிசன் வாணிபம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 200 |
| E.S.S | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| அல்லி | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| நந்தலாலா இரும்பகம் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 1000 |
| P.K மோட்டர்ஸ் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 2000 |
| ராஜ்குமார் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 200 |
| மாருதி ரேடிஸ் சென்ரர் | ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் | 500 |
| முத்துக்குமாரன் ஸ்ரோஸ் | சாவகச்சேரி | 1 மூட்டை அரிசி |
| V.M.K நகையகம் | கண்டிவீதி சாவகச்சேரி | 1000 |
| பரம்ஸ் மோட்டர்ஸ் | 113 கண்டிவீதி சாவகச்சேரி | 500 |
| நியு நதியா சூபலஸ் | 115 கண்டிவீதி சாவகச்சேரி | 500 |
| சண்முகம் | சாவகச்சேரி | 500 |
| ஈசன் களஞ்சியம் | சாவகச்சேரி | 500 |
| V.S சபாரட்ணம்ஸ் ஜுவல்லர்ஸ் | சாவகச்சேரி | 1000 |
| நியு V.M.W ஜுவல்லர்ஸ் | சாவகச்சேரி | 1000 |
| யாழ் ரெக்ஸ் | சாவகச்சேரி | 2000 |
| பொதிகை புக் ஸ்ரோர் | சாவகச்சேரி | 500 |
| லசீவ் நகைமாடம் | சாவகச்சேரி | 500 |
| இந்திரன் ஜுவல்லர்ஸ் | சாவகச்சேரி | 500 |
| Facian Indian | சாவகச்சேரி | 1000 |
| சீதா ஜுவல்லறி | சாவகச்சேரி | 1000 |
| பூஞ்சோலை பல்பொருள்' வாணிபம் | புதிய சந்தை சாவகச்சேரி | 50kg அரிசி |
| இன்பப் பிள்ளையார் | புதியசந்தை சாவகச்சேரி | 500 |
| பிள்ளையார் ஹாட்வெயார் | சாவகச்சேரி | 500 |
| தாமோதரம் பிள்ளை | சாவகச்சேரி | 500 |
| ரி சுபேந்திரன் | பளை | 500 |
| பிரசாத் | சாவகச்சேரி | 500 |
| உதயா உணவகம் | சாவகச்சேரி | 400 |
| கேதன் | சாவகச்சேரி | 500 |
| கணேசா ஹாட்வெயார் | சாவகச்சேரி | 500 |
| அருள் விநாயகர் மோட்டர்ஸ் | சாவகச்சேரி | 500 |
| London dormeen | சாவகச்சேரி | 100 |

| | | |
|---|---|---|
| திருப்பதி | சாவகச்சேரி | 500 |
| சுரேந்திரன் அம்பிகா | வெள்ளம் பொக்கட்டி | 1000 |
| குரு | சாவகச்சேரி | 1000 |
| ஜங்கரன் ஸ்ரோஸ் | புதிய சந்தை சாவகச்சேரி | 500 |
| நிலா புடவையகம் | புதிய சந்தை சாவகச்சேரி | 500 |
| ஜெகா ஸ்ரோஸ் | சாவகச்சேரி | 500 |
| ஜ" புரோல் பான்சி | சாவகச்சேரி | 200 |
| செல்லம் பிரதர்ஸ் | சாவகச்சேரி | 500 |
| திருமுகன் ஸ்ரோஸ் | சாவகச்சேரி | 500 |
| பிருந்தாபன் பல்பொருள் வாணிபம் | சந்தை உட்புறம் சாவகச்சேரி | 200 |
| கதிர்காமநாதன் | உணாவில் சந்தி சாவகச்சேரி | 500 |
| சஞ்சிகா நகைமாடம் | சாவகச்சேரி | 500 |
| லிங்கம் பான்சி | சாவகச்சேரி | 1000 |
| அம்பிகா மருந்தகசாலை | சாவகச்சேரி | 500 |
| **New kanesan store** | கைதடி | 500 |
| விஷாகா ஸ்ரோர்ஸ் | கைதடி யாழ்ப்பாணம் | 500 |
| சஜன் ஒலி அன் ஒளி | கைதடி யாழ்ப்பாணம் | 100 |
| பிள்ளையார் பல்பொருள் | கைதடி யாழ்ப்பாணம் | 500 |
| சிதம்பரம் பல்பொருள் | கைதடி யாழ்ப்பாணம் | 200 |
| **S.jana traders** | கைதடி யாழ்ப்பாணம் | 500 |
| நியூ லக்ஸ்மி ஹாட்வெயார் | கைதடி யாழ்ப்பாணம் | 500 |
| அம்பாள் ஐஸ்கிறீம் | கண்டிவீதி கைதடி | 500 |
| ஏவு அயஎநஅஎ அயசவ | கொடிகாமம் | 500 |
| காயத்திரி ரெக்ஸ் | PPD road kodikamam | 500 |
| சின்னையா ஸ்ரோஸ் | PPD road kodikamam | 500 |
| சேத்திரபாலகா புடவையகம் | கொடிகாமம் | 1000 |
| இளங்கீரன் சாருகன் | கொடிகாமம் | 1000 |
| ஸ்ரீ கௌரி வியாபார நிலையம் | கொடிகாமம் | 500 |
| வதனி நகைமாடம் | கொடிகாமம் | 1000 |
| ஜெய கிருஸ்ணா பல்பொருள் வாணிபம் | கொடிகாமம் | 300 |
| குணம் நகைமாடம் | கொடிகாமம் | 200 |
| ரூபன் எலக்ரோணிக்கல் | கொடிகாமம் | 1000 |
| வசந்தகாணன் | கொடிகாமம் | 500 |
| உதயம் பான்சி கவுஸ் | கொடிகாமம் | 200 |
| குணரட்ணம்ஸ் | கொடிகாமம் | 200 |
| ராஜேந்திரம் | வரணி | 100 |
| கமலினி | கொடிகாமம் | 150 |
| ஞரஎ எநைற | கொடிகாமம் | 1000 |
| அனொமென் | கொடிகாமம் | 100 |
| கஜமுகன் ஸ்ரோர்ஸ் | கொடிகாமம் | 500 |
| பா.ஸ்ரீஸ்கந்தராசா | மந்திகை பருத்தித்துறை | 5000 |
| ஜனனி நகைமாடம் | நெல்லியடி mmv road | 3000 |
| மருதம் இரும்பகம் | நெல்லியடி mmv road | 250 |
| சந்துஜன் | நெல்லியடி mmv road | 100 |
| **Vzone medicals** | நெல்லியடி | 200 |
| ஜரசதய நகை பூங்கா | நெல்லியடி | 1000 |
| ஞானம் அன் சன்ஸ் | நெல்லியடி | 200 |
| அம்பிகை நகைமாடம் | நெல்லியடி | 2000 |
| **Eagle paint** | நெல்லியடி | 500 |
| வர்ஷன் எலக்ரிக்கல் | நெல்லியடி | 200 |
| **S.Satheesh** | நெல்லியடி | 200 |
| **Tissa stores** | நெல்லியடி | 300 |
| ஞானலக்ஸ்மி களஞ்சியமும் | நெல்லியடி | 1000 |
| **Arun tex** | நெல்லியடி | 500 |
| செல்லமுத்தூஸ் ரெக்ஸ்ரைல்ஸ் | நெல்லியடி | 1000 |
| விண்மீன் வேளாண் | நெல்லியடி | 500 |

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
- மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
- எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
- கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேலன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
- தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
- இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m



NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை



# KIRUBA LEARNERS

Government Approved Driving Trainning School

## கிருபா லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை



தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4353 / 021 492 3200 / 077 722 5292

**யாழ்ப்பாணம் :**

முதலாம் கட்டைச்சந்தி,
பருத்தித்துறை.
021 492 3201
071 454 6958

விக்னேஸ்வரா
கல்லூரி வீதி, நெல்லியடி.
021 300 6550
071 454 6957

இல. 227:6, கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம். (தபாலக அண்மையில்)
021 224 2022
071 454 6956

கண்டி வீதி, சாவகச்சேரி.
(பேருந்து நிலையம் அண்மையில்)
021 492 3202
021 227 0700

**கிளிநொச்சி :**

A9 வீதி, கிளிநொச்சி.
(கச்சேரி முன்பாக)
021 228 5505
071 454 6955

புளியடிச்சந்தி,
முல்லை வீதி, விசுவமடு.
021 320 1515
071 454 6955

வாடியடி சந்தி,
பூநகரி.
021 320 1818
071 454 6955

நாச்சிக்குடா சந்தி,
மன்னார் வீதி, முழங்காவில்.
021 300 6544
071 454 6955

**மன்னார் :**

இல. 94, பிரதான வீதி,
மன்னார்.
071 988 7699
077 847 2732

**வவுனியா :**

216, A9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்க முன்
021 222 7777
071 454 6953


பெரியாழ்வார் ஆச்சிரமம்
தாயகம் டிஜிற்றல்
- யாழ்.பல்கலைக்கழகம் அருகில் -